**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 303 - நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128 இன் ஏற்பாடுகள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2.1 |
| | | 2. | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான | | பெறுகை நடைமுறையினை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும். | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை. | 2.1.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.7 |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், (நி.பி.150 ஐப் பார்க்க) | ஒதுக்கீட்டு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் | 2.6(அ) i |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

**செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய கைத்தறி இயந்திர செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் இயற்கை வர்ணங்கள் தொடர்பான அமைச்சிற்குக் கட்டுரையொன்றை வெளியிடவும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3.95 மில்லியன் விளைவற்றுப் போயிருந்தது.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொலிஸினால் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 செப்தம்பர் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 பெறுகைகள் திட்டம்

விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், பிரதான பெறுகைத் திட்டம் 6 மாதங்களுக்கு அதிகமல்லாத காலத்தினுள் உரியமுறையில் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய பெறுகைகள் திட்டமொன்று 2017 திசெம்பர் 22 ஆந் திகதியே திருத்தப்பட்டிருந்தது.

#### 2.2.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

திணைக்களத்தினால் சாரப் நெசவுப் பாடசாலை, சம்பாந்துறை நெசவுப் பாடசாலை, ஹக்மன நெசவுப் பாடசாலை, கடுபெத்த பயிற்சி நிறையம் ஆகியவற்றை நவீனமயப்படுத்தல் மற்றும் கைத்தறி உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 34.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 மற்றும் 8.13.4 வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் 8(அ) உப பிரிவின் பிரகாரம் பிரகாரமான அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அல்லது அதற்காக பணிப்பாளரால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட சான்றிதழின் அடிப்படையில் மதிப்பீட்டுப் பெறுமதியில் 50 சதவீதத்தை விஞ்சி நிறைவேற்றப்பட்ட பணிகளின் மொத்த பெறுமதியில் 75 சதவீதத்தை செலுத்த முடியுமான போதிலும், அதற்கு முரணாக புதுப்பித்தல்கள் 3 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ஹக்மன நெசவுப் பாடசாலையின் நவீனமயப்படுத்தலுக்கு ஆகக் குறைந்த கூறுவிலைகள் சமர்ப்பித்த விலைக்கேள்வியாளர் ஒரு உருப்படிக்காக சமர்ப்பித்திருந்த அலகு விலையை ஏற்றுக்கொள்ள முடியாதென குறிப்பிட்டு ஆகக் குறைந்த கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வியை புறக்கணித்து ரூபா 0.22 மில்லியனை விட அதிக பெறுமதியுடைய விலைக்கேள்வியாளருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கிரம நெசவுப் பாடசாலையை புதுப்பித்தலுடன் தொடர்புடையதான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 11.15 கன அடிகள் மற்றும் ரூபா 0.29 மில்லியன் கிரயமான விடயம் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 20 ஆந் திகதி விநியோகிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த 145 கைத்தறி இயந்திரங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. அத்துடன், 215 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் 418 வயின்டின் இயந்திரங்கள் எஞ்சியிருந்தன.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

திணைக்களத்தினால் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் 02 வாகனங்கள் 2017 மார்ச் 08 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் மோட்டார் வாகனத்திற்காக ரூபா 1.62 மில்லியனும், டபள் கெப் வண்டிக்காக ரூபா 2.21 மில்லியனும் வருடாந்த வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. வருடத்தின் 10 மாதங்களினுள் காரானது 13,429 கிலோமீட்டர்களும், டபள் கெப் 29,108 கிலோ மீட்டர்களும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆகக் குறைந்தது மாதமொன்றிற்கு 3,500 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிய போதிலும், முறையே 1342 மற்றும் 2,910 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

திணைக்களத்தினால் தனியார் துறைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வலு நெசவுக் கைத்தொழில் முயற்சிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 15.46 மில்லியனான குத்தகை பணம் மற்றும் உதிர்ப்பாகங்களின் பெறுமதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இயலாது போயிருந்தது.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய கைத்தறி புடவைகள் கண்காட்சி மாநாட்டினை சம்பாந்துறையில் நடாத்துவதற்கு ரூபா 0.52 மில்லியன் நகர மண்டபங்களை ஒதுக்கீடு செய்வதற்கான கட்டணங்கள் மற்றும் பத்திரிகை அறிவித்தல் கட்டணங்களுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், விருது விழா இடம்பெறாமையால் அந்தப் பணம் சிக்கனமற்ற செலவினமொன்றாகியிருந்தது.

## 2.5 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 வருடங்களுக்கு ஒரு தடைவை 150 சதவீதத்தினால் குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் குத்தகை வாடகை மீளாய்வு செய்யப்படுவதாக உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், முதற் தடவையாக 2016 ஆம் ஆண்டின் போது 04 வேலைத்தளங்களில் மாத்திரம் குத்தகை வாடகை மீளாய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் குத்தகைக்கு வழங்கிய நெசவுக் கைத்தொழில் முயற்சிகளிலிருந்து குத்தகைப் பணம் பெறுவனவு தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கைத்தறி புடவை கண்காட்சியுடன் இணைந்ததாக 2017 திசெம்பர் 15 ஆந் திகதி சுமார் ஒன்றரை மணித்தியாலங்களினுள் நடாத்தப்பட்ட திருமண சேலைக் கண்காட்சிக்காக ரூபா 2.40 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செலவினம் நெசவுப் பாடசாலைகள் மற்றும் வடிவமைப்பு பயிற்சி பாடசாலைகளின் ஆண்டிற்காக செலவினத்தில் 37 சதவீதமாகும்.

(ஈ) அமைச்சின் நிதியேற்பாடுகளில் மருதமுனை நெசவுக் கைத்தொழில் செயற்திட்டம் மற்றும் அம்பாறை மாவட்டக் கைத்தறி நெசவுக் கைத்தொழில் செயற்திட்டம் ஆகியவற்றுக்காக 147 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் 122 வயின்டின் இயந்திரங்கள் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரங்கள் பிரதேச செயலாளர்களினூடாக பெறப்பட்டிருந்த போதிலும், நலனாளிகளுக்கு வழங்கப்பட்டமைக்கான தகவல்கள் முன்வைக்கப்படவில்லை. வழங்கிய நலனாளிகளுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராததுடன், பின்தொடர் நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய கைத்தறி நெசவுக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காக உரிய கொள்கையினை தயாரித்தல், வெளிநாட்டு சந்தைப்படுத்தல் பணிகளை ஒழுங்கமைத்தல், நெசவுக் கைத்தொழில் துறைக்குப் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் உரிய அபிவிருத்தி பணிகள் மற்றும் கைத்தறி நெசவுக் கைத்தொழில்ன வளர்ச்சிக்கு தேவையான ஆராய்ச்சிகள் பரிசோதனைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற பணிகள் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 299.55 | 291.98 | 7.57 | 2.52 |
| | மூலதனம் | 26.10 | 21.65 | 4.45 | 17.05 |
| | **மொத்தம்** | **325.65** | **313.63** | **12.02** | **3.69** |
| **2014** | மீண்டுவருபவை | 427.68 | 418.67 | 9.0 | 2.11 |
| | மூலதனம் | 33.70 | 30.99 | 2.71 | 8.04 |
| | **மொத்தம்** | **461.38** | **449.66** | **11.72** | **2.54** |
| **2015** | மீண்டுவருபவை | 72.00 | 68.25 | 3.75 | 5.21 |
| | மூலதனம் | 31.50 | 18.28 | 13.22 | 41.96 |
| | **மொத்தம்** | **103.50** | **86.53** | **16.97** | **16.39** |
| **2016** | மீண்டுவருபவை | 72.80 | 67.29 | 5.51 | 7.57 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 33.15 | 33.02 | 0.13 | 0.39 |
| | **மொத்தம்** | **105.95** | **100.31** | **5.64** | **5.32** |
| **2017** | மீண்டுவருபவை | 120.81 | 115.18 | 5.63 | 4.66 |
| | மூலதனம் | 36.45 | 24.51 | 11.94 | 32.76 |
| | **மொத்தம்** | **157.26** | **139.69** | **17.57** | **11.17** |

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

07 செலவின விடயங்களுக்காக ரூபா 14.99 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 62.63 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 07 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தல்**

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு பணிகளுக்காக முறையே ரூபா 50.00 மில்லியன் மற்றும் ரூபா 97.62 மில்லியனுமாக ரூபா 147.62 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 39.81 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 107.81 அல்லது 73 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 5.50 | 5.15 | 3.20 | 3.64 | 30.00 | 14.27 |

மத்திய மாகாண சபையின் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 0.06 மில்லியன் கடன் மீதி தொடர்பில் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதி மற்றும் 118 ஆம் இலக்க பாதீட்டு

சுற்றறிக்கையின் 3.2.1 மற்றும் 3.2.2 பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்காய்வு பிரிவொன்று இல்லாதிருந்ததுடன், அமைச்சினாலேனும் உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**2.9 நிலைபேறான அபிவிருத்தி**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொர அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியதுடன், மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தினால் தமது விடய எல்லைக்கமைய அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்களால் நிறைபேறான அபிவிருத்தி நோக்கம் 01 மற்றும் 09 இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை அமுல்படுத்தல் தொடர்பில் உள்ளக சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் திணைக்களம் தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு அறிவுறுத்தல், தற்போது நிலவும் வள முகாமைத்துவத்திற்கான நடைமுறையொன்றை தயாரிப்பதற்கும், உரிய பணிகளை மேற்பார்வை செய்வதற்குமான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**2.10 மனிதவள முகாமைத்துவம்**

**2.10.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான, அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 57.51 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 05 | 03 | 02 | 05 |
| மூன்றாம் மட்டம் | 01 | - | 01 | 01 |
| இரண்டாம் மட்டம் | 109 | 82 | 27 | 109 |
| ஆரம்ப மட்டம் | 42 | 34 | 08 | 42 |
| **மொத்தம்** | **157** | **119** | **38** | **157** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் பிரதி / உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவியானது 2011 ஆம் ஆண்டு முதலாகவும், நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2008 ஆம் ஆண்டு முதலாகவும் வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) பயிற்சிகளுக்காக கடந்த 05 வருடங்களினுள் 2013 ஆம் ஆண்டின் போது 93 சதவீதமாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு வரையிலும் அது 73 சதவீதமாக இருந்தது.

(இ) வருடாந்த இடமாற்றங்களின் கீழ் 10 உத்தியோகத்தர்கள் 06 முதல் 14 வருடங்கள் வரையான காலமாக இடமாற்றம் பெறாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்தில் சேவையாற்றியவாறு இருந்தனர்.